# பதவி வெற்றிடங்கள்

## அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்

### சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் தகுதிவாய்ந்த, துல்லியமான, சுய ஊக்கமும் மற்றும் தொழில் அபிலாஷையும் உடைய, அணியாகப் பணியாற்றும் பொறுப்பு வாய்ந்த நபர்களிடம் இருந்து SPMC தாபனத்தில் உள்ள பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு விண்ணப்பங்களை கோருகின்றது.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும்,

i. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
ii. பதவியின் அலுவலக பணிகளை நிறைவேற்றுவதற்கும், தீவில் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும் உடலியல் மற்றும் உளவியல் ரீதியில் பொருத்தமானவர்களாக இருத்தல் வேண்டும்.
iii. சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

## 1. பிரதிப் பொது முகாமையாளர் - மனித வளங்கள் மற்றும் நிருவாகம் (HM 1-1)

**அலுவலகக் கடமைகள்:**

மனித வளங்கள் மற்றும் நிருவாகப் பிரிவின் தலைவராக இருப்பதுடன் மனித வளங்களும் நிருவாகமும் தொடர்பான எல்லா வகையான விடயங்களிலும் தவிசாளருக்கு /முகாமைத்துவ பணிப்பாளருக்கும் மற்றும் பொது முகாமையாளருக்கும் பொறுப்புக்கூறக்கூடியவராகவும் இருத்தல். அத்தகைய விடயங்கள் பின்வருமாறு காணப்படும்.

1. சாட்டப்படும் விடயங்களுக்குரிய கொள்கையை வகுத்தமைக்க சிபாரிசு செய்தல், ஒவ்வொரு விடயத்திற்கும் உரிய திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் தயாரித்தல்.
2. சபைப் பத்திரங்களை பணிப்பாளர்கள் சபைக்கு சமர்ப்பித்தல், பணிப்பாளர்கள் சபையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துதல்.
3. SPMC இல் பொதுவான அலுவலக முறைமைகளையும் நடைமுறைகளையும் அறிமுகப்படுத்தி அவற்றை நடைமுறைப்படுத்துதல்.

4. மனித வளங்கள் முகாமைத்துவமும் மற்றும் நிருவாகமும் தொடர்பான எல்லா தொழிற்பாடுகளிலும் பங்குபற்றுதல்.

5. அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடனும் அரச சாரா அமைப்புகளுடனும் தொடர்புகளை பேணுதல்.

6. மருந்துகள் உற்பத்திப் பிரிவில் cGMP ஐ நடைமுறைப்படுத்துவதற்கு உதவுதல் மற்றும் கண்காணித்தல் அத்துடன் SPMC இன் தர முகாமைத்துவ முறைமையை அனுசரித்து நடத்தல்.

**தகைமைகள்: வெளிவாரிப் பரீட்சாத்திகள்**

**(a)** (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் குறித்த பிரிவுக்கு பொருத்தமான மனித வளங்களில் / முகாமைத்துவத்தில் / நிருவாகத்தில் மேற் பிரிவு முதல் தரப் பட்டத்தை அல்லது அதற்கு சமமான தகைமைகளை பெற்றிருத்தல்.

**அல்லது**

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் குறித்த பிரிவுக்கு பொருத்தமான மனித வளங்களில் / முகாமைத்துவத்தில் / நிருவாகத்தில் விஷேட பட்டத்தை அல்லது அதற்கு சமமான தகைமைகளை பெற்றிருத்தல்.

**அல்லது**

(iii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் குறித்த பிரிவுக்கு பொருத்தமான மனித வள / நிருவாக / சட்ட பாடத்தை உள்ளடக்கிய இளமானிப் பட்டத்தை அல்லது அதற்கு சமமான தகைமைகளை பெற்றிருத்தல்.

**அத்துடன்**

**(b)** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் குறித்த பிரிவுக்கு பொருத்தமான மனித வளத்தில் / முகாமைத்துவத்தில் / நிருவாகத்தில் பட்டப்பின்படிப்பு பட்டத்தை (முதுமானி) பெற்றிருத்தல்.

**அத்துடன்**

(c) குறித்த தகுதியை பெற்றதன் பின்னர் ஒரு அரச நிறுவனத்தில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் / நியதிச்சட்ட சபையில் அல்லது ஒரு புகழ்பெற்ற வணிக ஸ்தாபனத்தில் மனித வள மற்றும் நிருவாகப் பிரிவுக்கு பொருத்தமான முகாமைத்துவ மட்டப் பதவியில் குறைந்தது 12 ஆண்டு கால சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்.

***தகைமைகள்: உள்ளகப் பரீட்சாத்திகள்***

பதவிக்கு பொருத்தமான விடயப் பிரிவில் முகாமையாளர் வகுதி (MM 1-1) தரம் I இல் குறைந்தது இரண்டு (2) வருட தொடர்ச்சியான திருப்திகரமான சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்.

***சம்பள அளவுத்திட்டம்***: HM 1-1- 2025- Rs. [140,640 - 15x 4,100 = 202,140/=]

01.01.2027 முதல் அடிப்படை சம்பளம் ரூ. 140,640/= வழங்கப்படும்.
(2025 ஆம் ஆண்டில் தொடக்க சம்பளப் புள்ளி ரூ. 105,399/= ஆகும்).

**வயதெல்லை**: 35 வயதுக்கு குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல். உள்ளகப் பரீட்சாத்திகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**ஆட்சேர்ப்பு முறை**: கட்டமைந்த நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

***ஏனைய பக்க நன்மைகள்:***

- PED 1/2015(i) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டுத்தாபனம் வழங்கும் அலுவலக வாகனம் அல்லது சொந்த வாகனத்திற்கான கொடுப்பனவுகள்

- எரிபொருள் கொடுப்பனவு (ஒரு மாதத்திற்கு 120 லீற்றர் டீசல் அல்லது பெற்றோல்)

## 2. பிரதிப் பொது முகாமையாளர் - தரக் கட்டுப்பாடு (HM 1-1)

**அலுவலகக் கடமைகள்:**

தரக் கட்டுப்பாட்டு பிரிவின் தலைவராக இருப்பதுடன் தரக் கட்டுப்பாடு தொடர்பான எல்லா விடயங்களிலும் தவிசாளருக்கு /முகாமைத்துவ பணிப்பாளருக்கும் மற்றும் பொது முகாமையாளருக்கும் பொறுப்புக்கூறக்கூடியவராகவும் இருத்தல். அத்தகைய விடயங்கள் பின்வருமாறு காணப்படும்.

1. ஆய்வுகூடப் பதவியணியின் பணியை ஒழுங்கமைத்து மேற்பார்வை செய்தல்.
2. விநியோகத்திற்கான சகல மருந்து கூறுகளையும், மருந்து உற்பத்தி கொள்கலன்களையும், மூடுசாதனங்களையும், தயாரிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் பொருட்களையும், பொதியிடும் பொருட்களையும், சுட்டுத்துண்டுகள் மற்றும் முடிவு மருந்து பொருட்களையும் அனுமதிக்கும் அல்லது நிராகரிக்கும் பொறுப்பும் அதிகாரமும்.
3. மருந்து உற்பத்திகளின் உறுதித்தன்மையை கண்காணித்து பாவனை காலம் முழுதிலும் தரத்தை உறுதிசெய்தல், WHO நிறுவனத்தின் தற்போதைய சிறந்த உற்பத்தி செயன்முறைகளை (cGMP) அனுசரிக்கப்படுவதை கண்காணித்தல்.
4. கொள்வனவு செய்ய வேண்டிய ஆரம்ப மூலப்பொருட்களுக்கும், பொதியிடும் பொருட்களுக்கும் உரிய தகவுதிறன்களை அங்கீகரித்தல்.
5. உற்பத்தி தளத்தில் நிகழும் cGMP ஐ மேற்பார்வை செய்தல் மற்றும் உற்பத்தி செயற்பாட்டில் SOP அனுசரிக்கப்படுகின்றதா என்பதை கண்காணித்தல்.
6. நீரின் தரத்தை உறுதிசெய்து கழிவு முறைமையை கண்காணித்தல்.
7. சந்தையில் உள்ள போட்டித்தரப்புகளின் உற்பத்தியின் தரத்தை கண்காணித்து எமது உற்பத்திகளுடன் ஒத்தீடுசெய்தல். தேவையாயின் எமது உற்பத்திகளை மேம்படுத்த சிபாரிசுகளை முன்வைத்தல்.
8. சந்தை தொடர்பான ஏதாவது முறைப்பாடு இருந்தால் சரியான பொருத்தமான நடவடிக்கையை எடுத்தல்.
9. பகுப்பாய்வு நடைமுறைகள் அடங்கலாக பொருத்தமான செல்லுபடியாகுதல்கள் மற்றும் உபகரணங்களின் அளவுத்திருத்தம் தொடர்பான கட்டுப்பாடு ஆகியன மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை உறுதிசெய்தல்.
10. அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடனும் அரச சாரா அமைப்புகளுடனும் தொடர்புகளை பேணுதல்.

11. மருந்துகள் உற்பத்திப் பிரிவில் cGMP ஐ நடைமுறைப்படுத்துவதற்கு உதவுதல் மற்றும் கண்காணித்தல் அத்துடன் SPMC இன் தர முகாமைத்துவ முறைமையை அனுசரித்து நடத்தல்.

**தகைமைகள்: வெளிவாரிப் பரீட்சாத்திகள்**

(a) (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் குறித்த பிரிவுக்கு பொருத்தமான முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடன் இரசாயனவியல் பாடம் உள்ளடங்கிய BSc பொது பட்டத்தை அல்லது அதற்கு சமமான தகைமைகளை பெற்றிருத்தல்.

**அல்லது**

(ii) பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக் கழகத்தில் குறித்த பிரிவுக்கு பொருத்தமான இரசாயனவியல் பாடத்தில் BSc விஷேட பட்டத்தை அல்லது அதற்கு சமமான தகைமைகளை பெற்றிருத்தல்.

**அல்லது**

(iii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் குறித்த பிரிவுக்கு பொருத்தமான இரசாயனவியல் பாடம் உள்ளடங்கிய BSc பொது பட்டத்தை அல்லது அதற்கு சமமான தகைமைகளை பெற்றிருத்தல்.

**அத்துடன்**

(b) (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் பகுப்பாய்வு இரசாயனவியல் அல்லது வேறு ஏதாவது விஞ்ஞானப் பரிசோதனை / மருந்துகள் பகுப்பாய்வு பிரிவுக்கு பொருத்தமான பட்டப்பின்படிப்பு பட்டத்தை (முதுமானி) பெற்றிருத்தல்.

**அல்லது**

(ii) இரசாயனவியல் நிறுவகத்தில் கூட்டு உறுப்புரிமையை பெற்றிருத்தல்.

**அத்துடன்**

(c) குறித்த தகுதியை பெற்றதன் பின்னர் ஒரு அரச நிறுவனத்தில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் / நியதிச்சட்ட சபையில் அல்லது ஒரு புகழ்பெற்ற வணிக ஸ்தாபனத்தில் விஞ்ஞான மதிப்பீட்டு / ஆய்வுகூடப் பரிசோதனை / மருந்துகள் உற்பத்தி பிரிவுக்கு பொருத்தமான முகாமைத்துவ மட்டப் பதவியில் குறைந்தது 12 ஆண்டு கால சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்.

**தகைமைகள்: உள்ளகப் பரீட்சாத்திகள்**

பதவிக்கு பொருத்தமான விடயப் பிரிவில் முகாமையாளர் வகுதி (MM 1-1) தரம் I இல் குறைந்தது இரண்டு (2) வருட தொடர்ச்சியான திருப்திகரமான சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்.

***சம்பள அளவுத்திட்டம்***: HM 1-1- 2025- Rs. [140,640 - 15x 4,100 = 202,140/=]

01.01.2027 முதல் அடிப்படை சம்பளம் ரூ. 140,640/= வழங்கப்படும்.
(2025 ஆம் ஆண்டில் தொடக்க சம்பளப் புள்ளி ரூ. 105,399/= ஆகும்).

***வயதெல்லை***: 35 வயதுக்கு குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல். உள்ளகப் பரீட்சாத்திகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

***ஆட்சேர்ப்பு முறை***: கட்டமைந்த நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

***ஏனைய பக்க நன்மைகள்:***

- PED 1/2015(i) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டுத்தாபனம் வழங்கும் அலுவலக வாகனம் அல்லது சொந்த வாகனத்திற்கான கொடுப்பனவுகள்
- எரிபொருள் கொடுப்பனவு (ஒரு மாதத்திற்கு 120 லீற்றர் டீசல் அல்லது பெற்றோல்)

## 3. *பிரதிப் பொது முகாமையாளர் - தயாரித்தல் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி* (HM 1-1)

***அலுவலகக் கடமைகள்***:

*தயாரித்தல் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்திப் பிரிவின் தலைவராக இருப்பதுடன்* SPMC *தாபனத்தின் தயாரித்தல் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி பணியுடன் தொடர்பான எல்லா விடயங்களிலும்*

தலைவருக்கு/முகாமைத்துவ பணிப்பாளருக்கு மற்றும் பொது முகாமையாளருக்கு பொறுப்புக்கூறக்கூடியவராக இருத்தல். அத்தகைய விடயங்கள் பின்வருமாறு காணப்படும்.

1. புதிய உற்பத்திகளைத் தயாரித்தல், முறையியலை அபிவிருத்தி செய்தல் மற்றும் செல்லுபடியாகுதல்கள் என்பன தொடர்பாக கீழ்நிலை பதவியணியினருக்கு வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்குதல்.
2. புதிய உற்பத்திகளைப் பதிவுசெய்வதற்கு வழிகாட்டுதல்.
3. உற்பத்தி அளவுத்திட்டம் மற்றும் செயல்முறைப்படுத்தல் செல்லுபடியாகுதல் ஆகியவற்றை திட்டமிட்டுக்கூறுதல்.
4. செயல்முறைப்படுத்தல் மேம்பாடுகள், தர மேம்பாடுகள், உற்பத்தி மேம்பாடுகள் தொடர்பாக தொழில்நுட்ப ஆலோசனையை வழங்குதல்.
5. ஆரம்ப மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதில் கருத்திற்கொள்ள வேண்டிய தரம் சார்ந்த தகவுதிறன்களை நிர்ணயித்தல்.
6. உற்பத்தியில் மீண்டும் மீண்டும் நிகழும் உற்பத்தி சார்ந்த பிரச்சினைகளையும் மற்றும் ஏற்கனவேயுள்ள உற்பத்திகளுடன் சம்பந்தப்படும் பிரச்சினைகளையும் தீர்ப்பது தொடர்பான ஆலோசனையையும் மற்றும் தீர்வுகளையும் வழங்குதல்.
7. திணைக்களத்தின் அபிவிருத்தித் திட்டங்களை மதிப்பீடு செய்து கருத்திற் கொள்ளப்படுவதற்காகவும் அங்கீகாரத்திற்காகவும் பொது முகாமையாளருக்கு சமர்ப்பித்தல்.
8. உற்பத்தி அபிவிருத்தியுடனும் மேம்பாடுகளுடனும் இணைந்த ஆராய்ச்சி சார்ந்த கருத்திட்டங்களை மேற்பார்வை செய்தல்.
9. தேவையான போதெல்லாம் ஏனைய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் க்ளினிக் பரிசோதனைகளை/உயிரியல் கிடைப்புத்தன்மை ஆய்வுகளை முன்னெடுத்தல்.
10. மருந்துகள் உற்பத்திப் பிரிவில் cGMP ஐ நடைமுறைப்படுத்துவதற்கு உதவுதல் மற்றும் கண்காணித்தல் அத்துடன் SPMC இன் தர முகாமைத்துவ முறைமையை அனுசரித்து நடத்தல்.

**தகைமைகள்: வெளிவாரிப் பரீட்சாத்திகள்**

**(a)** (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் குறித்த பிரிவுக்கு பொருத்தமான முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடன் இரசாயனவியல் பாடம் உள்ளடங்கிய BSc பொதுப் பட்டத்தை அல்லது அதற்கு சமமான தகைமைகளை பெற்றிருத்தல்.

**அல்லது**

(ii) *பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக் கழகத்தில் குறித்த பிரிவுக்கு பொருத்தமான இரசாயனவியல் பாடத்தில்* BSc *விஷேட பட்டத்தை அல்லது அதற்கு சமமான தகைமைகளை பெற்றிருத்தல்.*

***அல்லது***

(iii) *பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் குறித்த பிரிவுக்கு பொருத்தமான இரசாயனவியல் பாடம் உள்ளடங்கிய* BSc *பொதுப் பட்டத்தை அல்லது அதற்கு சமமான தகைமைகளை பெற்றிருத்தல்.*

***அத்துடன்***

**(b)** (i) *பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் பகுப்பாய்வு இரசாயனவியல் அல்லது வேறு ஏதாவது விஞ்ஞானப் பரிசோதனை / மருந்துகள் பகுப்பாய்வு பிரிவுக்கு பொருத்தமான பட்டப்பின்படிப்பு பட்டத்தை (முதுமானி) பெற்றிருத்தல்.*

***அல்லது***

(ii) *இரசாயனவியல் நிறுவகத்தில் கூட்டு உறுப்புரிமையை பெற்றிருத்தல்.*

***அத்துடன்***

**(c)** *குறித்த தகுதியை பெற்றதன் பின்னர் ஒரு அரச நிறுவனத்தில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் / நியதிச்சட்ட சபையில் அல்லது ஒரு புகழ்பெற்ற வணிக ஸ்தாபனத்தில் விஞ்ஞான மதிப்பீட்டு / ஆய்வுகூடப் பரிசோதனை / மருந்துகள் உற்பத்தி மற்றும் ஆராய்ச்சி / உணவுகள் பிரிவுக்கு பொருத்தமான முகாமைத்துவ மட்டப் பதவியில் குறைந்தது* 12 *ஆண்டு கால சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்.*

***தகைமைகள்: உள்ளகப் பரீட்சாத்திகள்***

*பதவிக்கு பொருத்தமான விடயப் பிரிவில் முகாமையாளர் வகுதி* (MM 1-1) *தரம்* I *இல் குறைந்தது இரண்டு* (2) *வருட தொடர்ச்சியான திருப்திகரமான சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்.*

***சம்பள அளவுத்திட்டம்***: HM 1-1- 2025- Rs. [140,640 - 15x 4,100 = 202,140/=]

01.01.2027 முதல் அடிப்படை சம்பளம் ரூ. 140,640/= வழங்கப்படும்.
(2025 ஆம் ஆண்டில் தொடக்க சம்பளப் புள்ளி ரூ. 105,399/= ஆகும்).

**வயதெல்லை**: 35 வயதுக்கு குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல். உள்ளகப் பரீட்சாத்திகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**ஆட்சேர்ப்பு முறை**: கட்டமைந்த நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

**ஏனைய பக்க நன்மைகள்:**

- PED 1/2015(i) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டுத்தாபனம் வழங்கும் அலுவலக வாகனம் அல்லது சொந்த வாகனத்திற்கான கொடுப்பனவுகள்
- எரிபொருள் கொடுப்பனவு (ஒரு மாதத்திற்கு 120 லீற்றர் டீசல் அல்லது பெற்றோல்)

**எல்லாப் பதவிகளுக்குமான பக்க நன்மைகள்**:

- வரவு மற்றும் செயலாற்றுகை ஊக்குவிப்புத்தொகை
- பயன்படுத்தாத வருடாந்த மற்றும் சுகயீன விடுமுறைகளுக்கு பணம் கிடைத்தல்
- மருத்துவக் காப்புறுதி மற்றும் மருத்துவச் செலவுகள் மீளளிப்பு
- EPF இற்கு சம்பளத்தின் 15% கூட்டுத்தாபனத்தால் பங்களிக்கப்படுதல் மற்றும் 10% ஊழியர்களால் பங்களிக்கப்படுதல்
- ETF இற்கு சம்பளத்தில் 3% கூட்டுத்தாபனத்தால் பங்களிக்கப்படுதல்.
- 1983 இன் 12 ஆம் இலக்கப் பணிக்கொடைச் சட்டத்திற்கும் மற்றும் MSD சுற்றறிக்கைக்கும் இணங்க பணிக்கொடை செலுத்தப்படுதல்
- மேலும் ஏனைய பக்க நன்மைகள்

**பொதுவான அறிவுறுத்தல்கள்:**

- குறித்துரைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தைப் பயன்படுத்தி தயாரித்த விண்ணப்பங்கள் உறவினர் சாராத இரண்டு நபர்களின் பெயர்களையும், முகவரிகளையும் மற்றும் தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்களையும் குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். எல்லாக் கல்விச் சான்றிதழ்களினதும் சான்றுபடுத்திய பிரதிகள் விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் **https://www.spmc.gov.lk** என்ற இணையத்தளத்திலிருந்து கீழிறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

- *அரசாங்கத் திணைக்களங்களிலும் மற்றும் நியதிச்சட்ட சபைகளிலும் பணியாற்றுகின்ற ஊழியர்கள், இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் அதற்கான நியமனத்தை ஏற்றுக்கொள்ளும் வகையில் அவர்கள் விடுவிக்கப்படுவார்களா என்பதை சான்றுபடுத்த வேண்டிய தத்தமது நிறுவனத் தலைவர்களின் ஊடாக தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்க வேண்டும்.*

- *விண்ணப்பிக்கப்படும் பதவி விண்ணப்பத்தை தாங்கிவருகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு கீழ்காணும் முகவரிக்கு இந்த விளம்பரத் திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.*
- ஒரு விண்ணப்பதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பித்தால், ஒவ்வொரு பதவிக்கும் *சான்றிதழ்களின் நகல்களுடன் தனித்தனி உறைகளில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.*

- மேற்குறித்த தேவைப்பாடுகளை அனுசரிக்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

***தலைவர்***
***அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்***
இலக்கம் 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,
கந்தவெல தோட்டம் - இரத்மலானா.

2025.06.22